**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070420236254

Volume: 7

Issue: 4

Month: April

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 08.01.2023

Accepted: 13.03.2023

Published: 01.04.2023

Citation:
Kavitha, S. "The 'Nannool' Say the Teacher and Student's Grammar, Anna Likes Teacher and Student's Ideal." *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 4, 2023, pp. 88–92.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i4.6254

*Corresponding Author:
skavithatamil@gmail.com

CC BY SA

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The 'Nannool' Say the Teacher and Student's Grammar, Anna Likes Teacher and Student's Ideal

**S. Kavitha**
*Professor & Head*
*School of Indian Languages and Comparative Literature*
*Tamil University, Thanjavur, Tamil Nadu, India*

**Abstract**
Anna once worked as a teacher. So he knows the teacher's ways. He carefully pondered the teachers' problems and expressed his views. Teachers should consider themselves well-offered rather than well-offered. Teaching is like sugarcane. On the one hand they gain knowledge; On the other hand they impart the acquired knowledge to the students. The work of teaching teachers and students. It is as if the mother bird and the young birds search for prey until it is ripe. When the baby bird reaches hunting maturity, it grows its own food. Just like a mother bird is happy to see this, teachers are also happy to see their students shine in knowledge. This article tries to compare the views expressed by teachers and students Nannool and Professor Anna.

**Key Words:** Grammar, Bible, Anna, Teacher, Student

**References**

1. Saravanan, S. 2008. *Silapthikkaram*. Chennai: Santhiya Pathipagam.

# நன்னூல் கூறும் ஆசிரியர், மாணவர் இலக்கணமும் பேரறிஞர் அண்ணா விரும்பும் ஆசிரியர், மாணவர் இலட்சியமும்

***முனைவர் ச. கவிதா***
*பேராசிரியர் & தலைவர்*
*இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப்பள்ளி*
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்*

***ஆய்வுச் சுருக்கம்***
*அண்ணா ஒரு காலத்தில் ஆசிரியராகப் பணி புரிந்தார். அவர், ஆசிரியர்களின் சிக்கல்களை கவனமாகச் சிந்தித்துத் கருத்துகளை வெளிப்படுத்தினார். ஆசிரியர்கள், நல்ல வாய்ப்பைப் பெற்றதாய்க் கருதுவதைவிட நல்ல சலுகைகளைப் பெற்றதாய்க் கருத வேண்டும். ஆசிரியப்பணி என்பது கரும்பு தின்னக் கூலி கிடைத்தது போலாகும். ஒருபுறம் அறிவைப் பெறுகிறார்கள்; மறுபுறம் பெற்ற அறிவை மாணவர்களுக்குப் புகட்டுகின்றார்கள். ஆசிரியர்கள், மாணவர்களுக்குக் கற்பிக்கும் பணி. தாய் பறவைப், பிள்ளைப் பறவைகளுக்கு இரைதேடும் பக்குவம் வரும்வரை அதைத் தேடிப் புகட்டுவது போலாகும். பிள்ளைப் பறவை, இரைதேடும் பக்குவத்தை அடைந்ததும் தன் உணவைத் தாமே வளர்த்துக் கொள்வர். இதைக் கண்டு தாய்ப்பறவை மகிழ்வது போல ஆசிரியர்களும் தம் மாணவர்கள் அறிவில் மிளிர்வது கண்டு மகிழ்கின்றார்கள். இத்தகைய, ஆசிரியர்கள் – மாணவர்கள் நன்னூலும் பேரறிஞர் அண்ணாவும் கூறும் கருத்துகளை இக்கட்டுரை ஒப்பிட முயல்கின்றது.*

***திறவுச்சொற்கள்:*** *இலக்கணம், நன்னூல், அண்ணா துரை, ஆசிரியர், மாணவர்*

## கல்வித்துறையில் இரட்டை அறிவு

நன்னூல், “ஆசிரியர்கள், கருத்தில் தெளிவு ஏற்படும் வகையில் கற்பிக்க வேண்டும்; நூல் நுவலும் பொருளை மாணவர் எளிதில் உணரும் வண்ணம் திரிபறக் கற்பிக்க வேண்டும். உலக இயற்பிற்கு ஏற்ப இவை போன்ற அறிவு நிரம்பியோராக ஆசிரியர்கள் திகழ வேண்டும்.” என்பதனை,

**“கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை...**
**உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்,**
**அமைபவன் நூல்உரை ஆசிரியன் அன்னே”[1]**

என்கின்றது. கற்பிக்கும் கருத்தில் தெளிவு வேண்டுமெனின் கற்பிக்கும் உள்ளமும் கற்பிக்கப்படும் நூலும் தெளிவுறத் திகழ வேண்டும்; அப்போதுதான் கற்பிப்பவர் உள்ளமும் கற்போர் உள்ளமும் தெளிவுறும் என்பது இந்நூற்பா உணர்த்தும் புதைப் பொருளாகும்.

இக்கருத்துகளை, அண்ணா தமக்கே உரிய புலப்பாட்டு முறையில், “இன்னும் கல்வித்துறையில் இரட்டை அறிவு இருக்கிறது; அதனால், ஆசிரியர் நிலை சங்கடமான சூழ்நிலைக்கு உள்ளாகிறது. உதாரணமாகக் கூற வேண்டுமானால் தமிழாசிரியர் ஒருவர் தனது வகுப்பில் மாணவர்களுக்குப் பாடங்கள் போதிக்கும் போது கங்கை எங்கே உற்பத்தியாகிறது என்பதை அவரே நம்பாவிட்டாலும் கூட “பரமசிவன் சடைமுடியிலிருந்து உற்பத்தியாகிறது” என்று தான் கூற வேண்டியிருக்கிறது. அதைத் தான் மாணவர்களும் கேட்டுக்கொள்ள வேண்டும். அடுத்த வகுப்பில் பூகோள ஆசிரியர் வந்து, “கங்கை இமயத்திலிருந்து உற்பத்தியாகிறது” என்று எடுத்துரைப்பார்; மாணவர்கள் தமிழாசிரியர் கூறியதை அந்தப் பூகோள ஆசிரியரிடம் கூறி, “என்ன நீங்கள் இப்படிச் சொல்லுகிறீர்கள்?” என்று கேட்டால், அவர்

என்ன சொல்லுவார்? எது சரியென்று அவரால் கூற முடியும்? இப்படி இரட்டை அறிவு மாணவர்களுக்கு அவசியம்தானா?"[2] எனக்கூறி "மெய்பொருள் காண்பது அறிவு"[3] என்ற குறட்கருத்திற்கு ஏற்பவும் ஆசிரியர்கள், மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றார்.

**அறிவுக் கொடையும் பொருட் கொடையும்**

அளவீடு செய்ய முடியாத கல்வியையும், அதனால் உண்டாகும் பலவகை நூற்கருத்துக் களையும் ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் தருதல் கொடை போன்றதாகும் என்ற கருத்தை நன்னூல்,

> **"அளக்கல் ஆகா அளவும் பொருளும்**
> **துளக்கல் ஆகா நிலையும் தோற்றமும்**
> **வறப்பினும் வளந்தரும் வண்மையும்"[4]**

என்கின்றது. அரசு ஊதியம் பெறாது அறிவுக் கொடைஅருளிய அக்கால ஆசிரியர்களுக்கு, மாணவர்கள் பொருட் கொடை தந்து சிறப்பிக்க வேண்டும் என்ற கருத்தை மறைபொருளாக இந்நூற்பா உணர்த்துகின்றது.

அக்காலத்தில் ஆசிரியர்களுக்கு மாணவர்கள் தந்த பொருட்கொடையை இக்காலத்தில் ஆசிரியர்களுக்கு அரசு ஊதியமாக வழங்குகின்றது. அண்ணா, தம்கால ஆசிரியர்களின் நிலையை "ஆசிரியர்களின் ஊதியம் உயர்ந்தால்தான் அவர்கள் வாழ்க்கையில் கவலை இல்லாத நிலையும் மனத்திலே குறையில்லாத நிறைவும் ஏற்பட்டால்தான் அறிவாற்றல் மிக்கவர்கள் ஆசிரியத் தொழிலில் வல்லவர்கள், தேர்ந்து சிறந்த திறமைசாலிகள் ஆசிரியர் தொழிலில் ஈடுபடுவார்காள்"[5]. என்றும் "ஆசிரியர்களின் சிக்கல்களுக்கு முதலிடம் அளித்து அதே நேரத்தில் தமிழக அரசு தனது நிலைமையும் பார்த்துக் கொண்டு, இருக்கிற நிதி நிலைமையைக் கொண்டு ஆசிரியர் சமுதாயத்துக்கும் கல்வித் துறைக்கம் எந்தெந்த வகையில் என்னென்ன நன்மைகள் செய்ய முடியுமோ அவற்றை எல்லாம் செய்து நிறைவேற்றத் தமிழக அரசு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள விருக்கிறது."[6] என்றும் கூறுவது இன்னும் பொருந்துவது அண்ணாவின் தீர்க்கதரிசனத் சிந்தனைக்குச் சிறந்த சான்றுகளாகும்.

**ஆசிரியரும் சிறந்த மாணவரே**

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பொருந்தும் வகையில் நன்னூல், உலக வழக்கையும் செய்யுள் வழக்கையும் ஆராய்ந்து கற்க வேண்டும்; மூலப் பாடங்களை மறவாது கற்க வேண்டும்; கற்ற பொருளைப் பலவாறு சிந்திக்க வேண்டும் என்ற கருத்துகளை,

> **"நூல்பயில் இயல்பே நுவலின்வழக் கறிதல்**
> **பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்"[7]**

என்கின்றது.

இக்கருத்துகளை மனத்திற் கொண்டே அண்ணா, ஆசிரியர்கள் கற்றலில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதனை "ஆசிரியர்கள் தங்கள் கற்ற கல்வியைப் பிறருக்கு எடுத்துக் கூறுவதோடு நின்று விடக்கூடாது. அவர்கள், மேலும் மேலும் படிக்க வேண்டும். புதுப்புதுக் கருத்துகளை அறிந்து அறிந்தவற்றை மாணவர்களுக்கு வழங்க வேண்டும். மாணவர்கள் - தாங்கள் கற்றுத் தேர்ந்து முடிந்ததும் சென்று விடுவார்கள்; ஆசிரியர்கள் - ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களுக்கு ஆசிரியராக அமைவதோடல்லாது, அவர்களும் நிரந்தர மாணவர்களாக இருக்க வேண்டியிருக்கிறது. இதற்கு அவர்களுக்கு நிறைந்த மன அமைதி தேவை; போதிய ஓய்வும் நல்ல நூலகமும் ஆவசியம் தேவை;[8] எனக் கூறுவதனை இன்றைய ஆசிரியர்களும் மாணவர்களும் கடைப்பிடித்தால் கல்வியுலகம் மேன்மையுறும்.

**தீக்காய்வார் போல் ஆசிரியர் - மாணவர் கூட்டுறவு**

குளிர் காய்வோன், நெருப்பைவிட்டு நீங்காமலும் நெருங்காமலும் இருப்பது போல மாணவர்கள், ஆசிரியர்களிடம் அச்சமுற்று நீங்காமலும் நெருங்காமலும் இருக்க வேண்டும்.

நடந்து செல்பவரின் உருவத்தைத் தொடரும் நிழல்போல மாணவர்கள் ஆசிரியர்கள் கருத்தை அன்புடன் பின்பற்றி, அவர் மகிழும் வகையில் நடந்துகொள்ள வேண்டும். இக்கருத்துகளை நன்னூல்,

**"அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி**
**நிழலின் நீங்கான் நிறைந்த நெஞ்சமோடு**
**எத்திறத்து ஆசான் உவக்கும் அத்திறம்**
**அறத்தின் திரியாப் படர்ச்சி வழிபாடே"**[9]

என்கின்றது. இவ்வாறிருப்பின், ஆசிரியரின் கற்பித்தலும் மாணவனின் கற்றலும் சிறக்கும் என்பது எவரும் கூறாமலே எளிதில் விளங்கும்.

கற்பித்தலும் கற்றலும் இனிமையாக இருக்க வேண்டுமெனின் ஆசிரியர்களும் மாணவர்களும் இணக்கமாக இருப்பதோடு அல்லாமல் இவ்விருவரும் அரசோடும் இணக்கமாக இருக்க வேண்டும் என்று விரும்பியே அண்ணா, "தமிழக அரசுக்கு எவ்வளவு தொல்லைகள் சூழ்ந்திருக்கின்றன என்பதை உணர்ந்து பார்க்குமாறு ஆசிரியப் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றேன்; என்றாலும் நீங்கள் கூறிய குறைபாடுகளைக் கவனிக்க மாட்டேன் என்றோ கோரிக்கைகளைப் புறக்கணித்து விடுவேன் என்றோ கருத வேண்டாம். நாங்கள் ஆட்சியில் இருக்கும் வரை இயன்றதைச் செய்து முடிப்போம். எல்லாச் சிக்கல்களையும் ஆய்ந்து பார்த்து, ஒவ்வொன்றாகச் செய்து முடிப்போம். உங்கள் விருப்பங்களை நிறைவு செய்யும் வகையில் உங்களுடன் உடன்பட்டு இணங்கியிருப்போம் என்பதைத் தெரிவித்து தமிழக அரசு மேற்கொள்ளும் நல்ல நடவடிக்கைகளுக்கு உங்களின் இதய பூர்வமான அன்பையும் ஒத்துழைப்பையும் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்"[10] எனக் கூறினார் எனலாம். இதன் மூலம் அவர் உள்ளம், பூவிதழின் மென்மையிலும் மென்மையான அன்புள்ளம், அரவணைக்கும் அன்னை உள்ளம் என்பதை உணர முடியும்.

**இலக்கணமும் இலட்சியமும்**

நல்ல ஆசிரியர், உயர்ந்த ஒழுக்கம் கொண்ட பிறப்பாளராக இருக்க வேண்டும்; உயிர்களிடம் இரக்கம் காட்டவேண்டும்; தெய்வத்தை வழிபட வேண்டும்; பல நூல் அறிவுடையோராக இருக்க வேண்டும்; நூற்பொருளை மாணவர்களுக்கு எளிதில் உணர்த்தவேண்டும் எனும் இலக்கணங்களை நன்னூல்,

**"குலன்அருள் தெய்வம் கொள்கை மேன்மை**
**கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை"**[11]

என்கின்றது. அண்ணாவோ, நல்ல மாணவர்களின் இலக்கணங்களுள் ஒன்றாக அவர்கள் நாட்டுப் பற்று உடையவர்களாகத் திகழ வேண்டும் என்பதை, "இங்கிலாந்து நாட்டுப் பள்ளியிலே படிக்கும் மாணவன் நாள்தோறும் இங்கிலாந்து நாட்டின் ஒருமைப்பாட்டின் மீது உறுதிமொழி எடுத்துக் கொள்வது இல்லை. ஆனால், நம் நாட்டிலோ நாள்தோறும் அல்லது ஆண்டுக்கு ஒருமுறை இந்திய ஒருமைப்பாட்டின் மீது உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். "நான் இந்திய ஒருமைப்பாட்டுக்கு கட்டுப் பட்டு நடப்பேன்" என்று உறுதிமொழி எடுத்துக் கொள்வதே, "நாம் ஒருமைப்பாட்டை உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம்" என்பதைத் தான் காட்டுகிறது"[12] எனக்கூறிச்சிறப்பிக்கின்றார். இத்தகைய ஒருமைப்பாட்டை நாம் உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை மறப்பதற்கில்லை.

தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் மாண்புடைய மரபு பழந்தமிழருடையது. அத்தமிழர் எவரையும் வெறுக்க மாட்டார்கள்; சோம்பலின்றி செயல்படுவார்கள்; பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சுவார்கள்; மனம் தளர மாட்டார்கள். இத்தகையச் சிறப்புகளை உடையோர் தமக்காக உழைக்காமல் பிறர்க்காக உழைப்பவர்களாக இருப்பதால்தான் இவ்வுலகம் இயங்குகின்றது என்ற கருத்துகளைப் புறநானூறு,

**"உண்டால் அம்ம இவ்வுலகம்...**
**தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;**
**துஞ்சலும் இவர்; பிறர் அஞ்சுவது அஞ்சி...**

**.... அயர்விலர்....**
**தமக்கான முயலா நோன்தாள்**
**பிறர்க்கென முயலுநர் உண்மையானே"[13]**

என்கின்றது. இப்பாடற் கருத்துகள் ஆசிரியர்களுக்கு முற்றிலும் பொருந்தும் தன்மை உடையது.

## முடிவுகள்

நன்னூலும் பேரறிஞர் அண்ணாவும் கூறும் ஆசிரியர் - மாணவர் இலக்கணங்களுக்கு இடையே கால வேறுபாடுதான் காணப்படுகிறதே தவிர கருத்து வேறுபாடுகள் பெரும்பாலும் காணப்படவில்லை.

நன்னூல் ஆசிரியர் பவணந்தியாரும் பேரறிஞர் அண்ணாவும் ஆசிரியர்களாகக் கடமையாற்றியமையால் கற்பித்தல் - கற்றல் மாண்புகளைத் திறம்பட அறிந்திருந்தனர்.

அறிவைத் தரும் ஆசிரியர்களுக்கு மாணவர்கள் பொருளைத் தர வேண்டும் என நன்னூல் கூற, அப்பொருளை ஊதியமாக அரசு தருவதில் காட்டும் ஆர்வத்தை அண்ணா புலப்படுத்துவது அவரை முழுமையான கல்வியாளராக அடையாளப்படுத்துகின்றது.

ஆசிரியர்களிடமிருந்தும் மாணவர்களிடம் இருந்தும் அரசும் சமுதாயமும் பணத்தையல்ல பண்பாட்டையே எதிர்பார்க்கின்றது. அவ்விரண்டு அமைப்புகளும் நிலையில்லாத செல்வத்தைவிட நிலையான சேவையேப் பெரிதென்று எண்ணுகின்றது.

ஆசிரியர்களிடமிருந்து மாணவர்கள் பெற்ற அறிவை எந்தவிதத்திலாவது சமுதாயத்திற்குத் திருப்பிச் செலுத்தாமல் போனால் பொது வாழ்வே பாலைவனமாகும் என்பதை உரியோர் உணர்தல் வேண்டும்.

கவலையற்ற, களிப்பு நிறைந்த சமுதாய நலன் நோக்கிக் கல்வி கற்க வேண்டும் என்னும் நன்னூலின் ஆசிரியர் - மாணவர் இலக்கணத்தின் அடிக்கருத்தாகும். அதுவே, பேரறிஞர் அண்ணாவின் இலட்சியமுமாகும்.

## குறிப்புகள்

1. வே. சாமிநாதையர் (பதி.) நன்னூல் மூலமும் மயிலைநாதருரையும், நூ. 26
2. பேரறிஞர்அண்ணா, பேரறிஞர்அண்ணாவின் சொற்பொழிவுகள், தொகுதி 2, ப. 243
3. பரிமேலழகர் (உரை.), திருக்குறள், எண் 423
4. வே.சாமிநாதையர் (பதி.), மேலது, நூ. 28
5. பேரறிஞர் அண்ணா, மேலது, பக். 568, 569
6. மேலது, ப. 569
7. வே.சாமிநாதையர் (பதி.) மேலது, நூ. 41
8. பேரறிஞர் அண்ணா, மேலது, ப. 242
9. வே.சாமிநாதையர் (பதி.) மேலது நூ. 9
10. பேரறிஞர் அண்ணா, மேலது, ப. 570
11. வே.சாமிநாதையர் (பதி.) மேலது நூ. 26
12. பேரறிஞர் அண்ணா, மேலது ப. 561
13. உ.வே.சாமிநாதையரவர்கள் (உரை.) புறநானூறு பா. 182